மழைவெள்ளக் காலத்தில் மக்களைக் காத்து நிற்கும் தி.மு.க!

ஓர் இரவில் 30 சென்ட்டி மீட்டரைக் கடந்து சென்னையில் மழை பெய்து ஓய்ந்தது. மறுநாள் பகலில் சமூக வலைத்தளச் செயல்பாட்டாளரான பாபு ஈ.வெ.ரா. என்ற தோழர் இப்படி எழுதியிருந்தார், "விஜய் அதிர்ஷ்டசாலி. மற்றவர்களுக்கு உடம்பில் மச்சம் இருக்கும். விஜய்க்கு மச்சத்தில் உடம்பு இருக்கிறது" என்று! அவர் அப்படி எழுதியதற்குக் காரணம், திராவிட மாடல் ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட மழை நீர் வடிகால் பணிகளால், கன மழை பெய்த போதும், காலையில் தண்ணீர் தேங்காமல் இருந்ததையும், போக்குவரத்தும் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்படாமல் இருந்ததையும்தான்.

த.வெ.க.வின் விர்ச்சுவல் வாரியர்ஸ் எனப்படும் புளுகு மூட்டைகளோ, மழை பெய்த இரவு முழுவதும், சாலைகளில் தண்ணீர் வெள்ளம் போல ஓடிக் கொண்டிருப்பதாகவும், தி.மு.க ஆட்சியில் மழைநீர் வடிகால் பணிகளுக்காக செலவிடப்பட்ட 4000 கோடி ரூபாய் எங்கே போனது என்று கேட்டும் ரீல்ஸ் போட்டுக் கதறிக் கொண்டிருந்தனர். மழை தொடர்ந்து பெய்யும்போது சாலையில் தண்ணீர் தேங்கித்தான் இருக்கும். தமிழ்நாட்டின் தலைநகரில் மட்டுமல்ல, இந்தியாவின் பிற நகரங்களிலும் மழை பெய்யும்போது சாலையில் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கும். அப்படி ஓடினால்தான் அதற்குப் பெயர் கன மழை. வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட எல்லா நாடுகளிலும் இதே நிலைதான். மழைவிட்ட பிறகு, எவ்வளவு நேரத்தில் தண்ணீர் வடிகிறது என்பதே மழை நீர் வடிகால் திட்டத்தின் தன்மையை உணர்த்தும்.

பொழுது விடிந்தபோது சென்னையின் பெரும்பாலான முதன்மைச் சாலைகளிலும், உட்புறச் சாலைகளிலும் தண்ணீர் தேங்காமல் வடிந்திருந்தது. இரவு முழுவதும் விழித்திருந்து பொய்யையும் வன்மத்தையும் கக்கிய த.வெ.க.வின் விர்ச்சுவல் வாரியர்ஸ் ஏமாந்து போனார்கள். மூளையும் உணர்ச்சியும் உள்ள கூட்டம் என்றால் உண்மையைச் சொல்லும். இல்லையென்றால் மௌனமாக இருந்துவிடும். த.வெ.க.விடம் அவற்றை எதிர்பார்க்க முடியுமா? தண்ணீர் வடிந்ததற்கு த.வெ.க அரசின் நிர்வாகம்தான் காரணம் என்று மறுபடியும் பொய்களைத் தொகுத்து ரீல்ஸ் போடத் தொடங்கிவிட்டார்கள்.

சென்னையை மழைக் காலப் பேரிடர்களிலிருந்து மீட்பதற்காகத் திராவிட மாடல் அரசு மேற்கொண்ட பணிகளின் விளைவாகவே, ஓர் இரவு முழுவதும் பெய்த கன மழைக்குப் பிறகும், தண்ணீர் வடிந்து, மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கையைத் தொடர முடிந்தது என்கிற எளிய உண்மையை த.வெ.க.வின் விர்ச்சுவல் வாரியர்ஸ்களால் மட்டுமல்ல, த.வெ.க. ஆட்சி நிர்வாகத்தில் உள்ளவர்களாலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

மழை நேரத்தில் மேற்கொண்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாலும், மோட்டார் பம்பு வைத்து தண்ணீரை இறைத்ததாலும்தான் இந்த நிலைமை என்பதாக அமைச்சர்களே ஊடகங்களிடம் பச்சைப் பொய் சொன்னார்கள். பேரிடர் மேலாண்மைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் செங்கோட்டையன், பொய் சொல்வதிலும் த.வெ.க கேபினட்டில் நான்தான் சீனியர் என்பதை நிரூபிக்கும் வகையில், தி.மு.க. ஆட்சியில் 40% பணிகள் தான் நிறை வடைந்தன. த.வெ.க ஆட்சியில்தான் மிச்சப் பணிகள் முடிந்தன என்று கூச்சமேயில்லாமல் ஊடகங்களிடம் பேசினார்.

சென்னை மாநகராட்சி ஆணையர் சமீரன் ஐ.ஏ.எஸ் அரசியல் காரணங்களுக்கு ஆட்பட்டு மாநகர மேயரின் ஆய்வுப்பணிகளுக்குத் துணை நிற்காமல், அமைச்சர்கள் போகும் இடங்களுக்கு மட்டுமே வால் பிடித்தபடி போனதுடன், "மழை நீர் வடிகால் பணிகளை விமர்சிக்கவும் முடியாதுசாதனையாகவும் பார்க்க முடியாது. இயற்கையுடன் மனிதன் போராட வேண்டும்" என்ற தத்துவத்தை உதிர்த்து தனக்குள்ள நெருக்கடியான சூழலை உணர்த்தினாலும், ஓர் அதிகாரியாக அவருடைய மனசாட்சி உண்மையை உதட்டின் வழியாக வர வைத்துவிட்டது.

"சென்னையில் 2021ஆம் ஆண்டுக்கு முன்பு தண்ணீர் தேங்க வாய்ப்புள்ள இடங்கள் 700ஆக இருந்தது. அது இப்போது (2026) 291ஆக குறைந்துள்ளது" என்று சமீரன் ஐ.ஏ.எஸ். தெரிவித்திருக்கிறார். மழைக்காலச் சென்னையை மனதிற்கொண்டு, ரூ.6,495 கோடி ரூபாய் மதிப்பில் 1,422.28 கி.மீ. நீளத்திற்கு மழை நீர் வடிகால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 1,076 கி.மீ.நீளத்திற்குப் பணிகளை நிறைவு செய்தது திராவிட மாடல் அரசு. இதில் எந்தப் பகுதியில் எந்த எளவு தண்ணீர் தேங்கும் என்பதையும் கவனத்தில்கொண்டு, அதற்கேற்ப மழை நீர் வடிகால்களின் அகலம், நீளம், உயரம் ஆகியவை அமைக்கப்பட்டன.

திராவிட மாடல் ஆட்சியில் மழை நீர் வடிகால் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை எப்படி செலவிடப்பட்டது? எந்தளவுக்குப் பணிகள் நிறைவடைந்தன? அதனால் ஏற்பட்டுள்ள பலன்கள் என்னென்ன? என்பவை குறித்து சமூக வலைத்தளச் செயல் பாட்டாளரான விமல் மணி ஆய்வுப்பூர்வ மானப் புள்ளிவிவரங்களைப் பதிவிட்டுள்ளார்.

"2021 முதல் 2026 வரையிலான தி.மு.க. ஆட்சியில் வடசென்னைக்கான 3,059 கோடி ரூபாய் செலவிலான கொசஸ்தலையாறு வடிநிலத் திட்டம், தென் சென்னைக்கான 1,357.6 கோடி ரூபாய் செலவிலான கோவளம் வடிநிலத்திட்டம் ஆகியவற்றின் பணிகள் ஒவ்வொரு கட்டமாக மேற்கொள்ளப்பட்டு ஏறத்தாழ நிறைவு செய்யப்பட்டது. மத்திய சென்னைக் கான வடிகால் பணிகள் சிங்காரச் சென்னை 2.0, வெள்ள நிவாரண நிதி, உலக வங்கி நிதி, மூலதன நிதி ஆகியவற்றின் மூலமாக ஏறத்தாழ 699 கோடி ரூபாய் மதிப்பிலான 225 கி.மீ. பணிகள் முழுமையாக நிறைவடைந்து, 276.54 கோடி ரூபாய்க்கான 70.26 கி.மீ. பணிகள் நடைபெற்று வருகின்றன. இவைபோக, வடசென்னை வளர்ச்சித் திட்டத்தில் 5.51 கி.மீ. பணிகளும், சென்னை மாநகராட்சியின் சொந்த மூலதன நிதியிலான 760.7 கோடி ரூபாயில் 199.2 கி.மீ பணிகளும், கால்வாய் மேம்பாடு மற்றும் தூர்வாரு தலுக்கான 302.38 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகளும் மேற்கொள்ளப்பட்டதன் விளைவே சென்னையில் மழை நீர் தேங்காமல் இருப்பதற்குக் காரணம்" என்று விரிவாகவும் எல்லாருக்கும் புரியும்படியான செயற்கை நுண்ணறிவின் துணையுடன் உருவாக்கப்பட்ட படத்தின் மூலமாகவும் விளக்கியுள்ளார்.



கோவி.லெனின்
தி.மு.க .தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

சமூக வலைத்தளச் செயல்பாட்டாளர் விமல் மணி இந்தத் தரவுகளைப் பதிவிட்டிருப்பதுடன், 5 மாத த.வெ.க. ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் என்ன, ஒதுக்கிய நிதி எவ்வளவு என்று வெளிப்படையாக அறிவிக்க முடியுமா என்றும் கேட்டிருக்கிறார். மோட்டார் பம்ப் செட் வைத்து மழைத் தண்ணீரை வெளியேற்றினார்கள் என்றால், அந்தத் தண்ணீரை எங்கே கொண்டு போய் கொட்டினீர்கள்? அதுவும் திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர் மு.க.ஸ்டாலின் அமைத்த மழை நீர் வடிகால்களில்தானே என த.வெ.க.வினரை நோக்கி கேள்வி எழுப் புகிறார்கள் நெட்டிசன்கள்.

சென்னையின் உள்கட்டமைப்புக்காக திராவிட நாயகர் மு.க.ஸ்டாலினுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும் என்று பலரும், தி.மு.க. தலைவரின் நிர்வாகத் திறன் மிக்க ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள சென்னை தவறிவிட்டது என்று சிலரும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகிறார்கள். விஜய்யின் த.வெ.க. அரசு என்னதான் ஸ்டிக்கர் ஒட்டும் வேலைகளைப் பார்த்தாலும், மழை வெள்ள மேலாண்மைப் பணிகளில் தி.மு.க. அரசு மேற்கொண்ட அக்கறையையும், தி.மு.க.வின் அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள், மேயர், கவுன்சிலர்கள் உள்ளிட்டோர் மக்களுக்குத் துணையாகக் களத்தில் நின்றதையும் மக்கள் அறிவார்கள். சென்னையில் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதுமே பெரிய நகரங்களில் தி.மு.க. ஆட்சியில் தொலை நோக்குப் பார்வையுடனான மழை நீர் வடிகால் பணிகள் சிறப்பாக முன்னெடுக்கப் பட்டன.

ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் மக்களின் துயரத்தில் துணை நிற்கின்ற இயக்கம், தி.மு.கழகம். 1952ஆம் ஆண்டு நாகையில் புயல் வீசியது. தி.மு.க தொடங்கப்பட்ட மூன்று ஆண்டுகள்தான் ஆகியிருந்தது. பொதுத் தேர்தலிலும் கூட பங்கேற்கவில்லை. ஆனாலும், பேரறிஞர் அண்ணா அவர்கள் நாகை உள்ளிட்ட கீழத்தஞ்சை மாவட்ட மக்களுக்கான நிவாரணம் வழங்குவதற்காகக் கழகத்தின் சார்பில் ஒரு குழு அமைத்தார். அந்தக் குழுவுக்குப் பொறுப்பு வகித்தவர் கலைஞர். பொதுக்கூட்டம், நாடகம், உண்டியல் வசூல் எனப் பல வழிகளிலும் நிதி திரட்டினார். 1953ல் கைத்தறி நெசவாளர்கள் துயர் துடைப்பதற்காகக் கைத்தறி துணி விற்கும் இயக்கத்தை தி.மு.க நடத்தியது. திருச்சியில் அண்ணாவும், சென்னையில் கலைஞரும், மற்ற நகரங்களில் கழக முன்னோடிகளும் கைத்தறித் துணிகளைக் கூவிக்கூவி விற்றார்கள். அந்தக் காலத்திலேயே ஒரு இலட்ச ரூபாய்க்கு மேல் கைத்தறித் துணிகள் விற்பனையாயின.

புயலால் பாதிக்கப்பட்ட நாகை பகுதி மீனவர்கள், விவசாயிகள், உழைக்கும் மக்களுக்கான உடைகளுக்காக, கழகம் வசூலித்த புயல் நிவாரண நிதியிலிருந்து கைத்தறித் துணிகளை வாங்கி அவர்களுக்கு வழங்கினார் கலைஞர். ஒரு நிதியில், புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உடை கிடைத்தது. நெசவாளர்களுக்கும் துணி விற்றது. இரு தரப்புக்கும் பயன் கிடைத்தது. இதுதான் கலைஞரின் நிர்வாக மேலாண்மைத் திறன்.

1978ஆம் ஆண்டு நாகைப் பகுதியில் மீண்டும் ஒரு புயல் வீசிய போது, அ.தி.மு.க. ஆட்சியால் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தார் கலைஞர். சிறையிலிருந்தபடியே உடன்பிறப்புகளுக்கு கடிதம் எழுதி, நிவாரணப் பணிகளைக் கழகத்தினர் மேற்கொள்ள வேண்டும் என்றும், நிதி திரட்ட வேண்டும் என்றும் கோரிக்கை வைத்து, நிதி அனுப்பிய விவரங்களைத் தனக்குத் தெரிவிக்கும்படியும் கேட்டுக் கொண்டார். நிவாரண நிதி குவிந்தது. நிவாரணப் பணிகளைக் கழகத்தினர் மேற்கொண்டனர்.

2015ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்ட செயற்கை வெள்ளத்தால் சென்னை தத்தளித்தபோது, தி.மு.க. தலைமையும் உடன்பிறப்புகளும் களத்தில் இறங்கி உணவு, உடை, மருந்து போன்ற அத்தியாவசியப் பொருட்களை சென்னை மக்களுக்கு வழங்கினார்கள். தலைமைக் கழகம் சார்பில் 1 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. அண்ணா அறிவாலயத்தில் வார் ரூம் எனப்படும் மீட்புப் பணி மையம் அமைக்கப்பட்டதுடன், அங்கு லாரி லாரிகளாக உடன்பிறப்புகள் வழங்கியப் பொருட்கள் வந்து குவிந்தன. அவற்றை சென்னையில் தேவைப் படும் மக்களுக்கு வழங்கியது கழகம்.

2015 சென்னை வெள்ளத்தின்போது, தி.மு.க. உள்ளிட்ட பலரது உதவிகள் மீது ஸ்டிக்கர் ஒட்டிக் கொண்டது அ.தி.மு.க. அரசு. இப் போது மழை நீர் வடிகால் பணிகளுக்காக திராவிட மாடல் அரசு ஆற்றிய பணிகளின் மீது ஸ்டிக்கர் ஒட்டிக் கொள்ளப் பார்க்கிறது த.வெ.க அரசு.

தி.மு.க.வின் சாதனைகளை மற்றவர்கள் அபகரித்துக் கொள்வது புதிதல்ல. தி.மு.க. அதைப் பற்றி அலட்டிக் கொண்டதுமில்லை. மக்களுக்குத் துணையாக நிற்பதே தி.மு.க.வின் முதன்மையானப் பணி. கஜா, ஒக்கி, வர்தா புயல்கள் பாதிப்பின்போதும் மக்களுடன் நின்றது. கேரளா, ஒடிசா போன்ற மாநிலங்களில் மழைவெள்ளபுயல் பாதிப்புகளின்போதும் தி.மு.கழகம் நிவாரண நிதி வழங்கி உதவிக்கரம் நீட்டியது.

உலகமே முடங்கிக் கிடந்த கொரோனா லாக்டவுன் போதும் , கழகத் தலைவரின் கட்டளையை ஏற்று, 'ஒன்றிணைவோம் வா' என உடன்பிறப்புகள் தங்கள் உயிரைப் பற்றிக் கவலைப்படாது, மக்களின் உயிர் காக்கவும், அவர்களுக்குத் தேவையான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் களமிறங்கிச் செயல்பட்டனர். வரலாற்றில் தி.மு.க.வின் பங்களிப்பை எவராலும் ஸ்டிக்கர் ஒட்டி மறைத்து விடமுடியாது.

ஒவ்வொரு மழைக்காலத்திலும் தங்கள் பகுதி எப்படி இருந்தது என்பதையும், தி.மு.க. ஆட்சியில் மழை நீர் வடிகால் பணிகள் எப்படியெல்லாம் மேற்கொள்ளப் பட்டது என்பதையும் அறிந்துள்ள மக்கள் தி.மு.க.வையும் அதன் தலைவரையும் நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறார்கள். சென்னை மக்களுக்காக மழை நேரத்தில், கழகத் தலைவரின் அறிவுரைப்படி இப்போதும் களத்தில் நிற்கிறார்கள் தி.மு.க.வினர். **எல்லாருக்கும் பெய்யும் மழைக்கு மற்றொரு பெயர், தி.மு.க.**

த.வெ.க. மாவட்டச் செயலாளர் அரசு அலுவலகக் கட்டிடத்தை திறந்து வைத்த சம்பவம் :

பொதுமக்கள் - சமூக ஆர்வலர்கள் மத்தியில் பெரும் சர்ச்சை!

ரிஷிவந்தியம், அக்.23: கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியத்தில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஏற்படுத்த வேண்டும் என அந்தப் பகுதி பொது மக்கள் கடந்த 60 ஆண்டு காலமாக கோரிக்கை வைத்திருந்த நிலையில், கடந்த ஐந்து வருடமாக நமது திராவிட மாடல் நல்லாட்சி நடைபெற்றுக் கொண்டிருந்த போது ரிஷிவந்தியம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயனிடம் பொதுமக்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைத்துத் தர வேண்டும் என கோரிக்கை வைத்திருந்தனர். பல ஆண்டுகளாக பொதுமக்கள் வைத்திருந்த கோரிக்கையை நிறை வேற்ற முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் நல்லாட்சியில், பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த எ.வ.வேலுவின் கவனத்திற்கு கொண்டு சென்று வலியுறுத்தினார்,

60 ஆண்டு கால கோரிக்கையை ஏற்று, ரூ.6.50 கோடி மதிப்பீட்டில் ரிஷிவந்தியத்தில் புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடம் கட்டப்படும் என முறைப்படி அறிவித்தார்,

இதனைத் தொடர்ந்து புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைக்க 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ரிஷிவந்தியம் ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்து 22 கிராம ஊராட்சிகள் உள்ளடக்கிய ரிஷிவந்தியம் ஒன்றியமும், அதே போல் 38 கிராம ஊராட்சிகள் உள்ளடக்கிய வானாபுரம் புதிய ஒன்றியமும் உருவாக்கி தமிழ்நாடு அரசு அதிகாரப்பூர்வமாக அரசாணை வெளியிடப்பட்டது, மேலும் இப்புதிய ஒன்றியங்களில் செயலாக்கம் அக்டோபர் 20 முதல் அமலுக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டது,

அந்த வகையில் அரசின் அறிவிப்பின்படி புதிய கட்டிடம் கட்டி முடிக்கப்படும் வரை பொதுமக்களின் வசதிக்காக ரிஷிவந்தியத்தில் உள்ள சமுதாயக் கூடத்தில் தற்காலிக ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அமைக்கப்பட்டது. இதன் திறப்பு விழா அக்டோபர் 21 புதன் கிழமை அன்று அனைத்துக் கட்சிகளை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொது மக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கழகத் தலைவருக்கு பொதுமக்கள் நன்றி!

நிகழ்ச்சியில் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., தற்காலிக ஊராட்சி ஒன்றிய அலுவலக கட்டிடத்தை திறந்து வைத்து, அனைவருக்கும் நன்றி தெரிவித்து சிறப்புரை ஆற்றிய பிறகு அங்கிருந்து புறப்பட்டார்.

60 ஆண்டு கால கோரிக்கையை விரைந்து நிறை வேற்ற நடவடிக்கை எடுத்த திராவிட மாடல் நாயகர், சமூக நீதிக் காவலர், கழகத் தலைவர், முன்னாள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், கழக இளைஞரணி செயலாளர், முன்னாள் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு, வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. ஆகியோர்களுக்கு அப்பகுதி மக்கள் நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

இதனை தொடர்ந்து சிறிது நேரத்திற்குப் பின் த.வெ.க., மாவட்டச் செயலாளர் பரணி பாலாஜி தனது ஆதரவாளர்களுடன் வந்து கட்டிடத்தை பார்வையிட்டு திறந்து வைத்தார்.

பொதுமக்கள் அதிர்ச்சி!

தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகளுக்கு கட்சியின் தலைமை அறிவிப்பின்படி கட்சி நிர்வாகிகள் யாரும் எந்த ஒரு அரசு நிகழ்ச்சியிலும் கலந்து கொள்ளக் கூடாது மற்றும் அரசு அலுவலகங்களில் ஆய்விற்கு செல்லக்கூடாது என தெரிவித்தும் அதனை மதிக்காமல் நேற்று முன்தினம் நடைபெற்ற தற்காலிக வட்டார வளர்ச்சி அலுவலக கட்டிட திறப்பு விழாவில் எந்த ஒரு அரசுப் பதவியிலும் இல்லாத மாவட்டச் செயலாளர் பரணி பாலாஜி அலுவலகத்தை திறந்து வைத்த சம்பவம் பொது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்ப டுத்தியுள்ளது, நாளுக்கு நாள் தமிழக வெற்றிக் கழகத்தினர் இது போன்று சம்பவத்தில் ஈடுபடுவது தொடர் வாடிக்கையாக்கி உள்ளதால் பொது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது,

பரணி பாலாஜி
மக்கள் பிரதிநிதியா?

மாவட்டச் செயலாளராக இருக்கும் பரணி பாலாஜி மந்திரியாக உள்ளாரா அல்லது எம்.எல்.ஏ. வாக உள்ளாரா இல்லை மக்கள் பிரதிநிதியாக உள்ளாரா என பொதுமக்கள் மத்தியில் கேள்வியும் எழுந்து உள்ளது. அந்த தொகுதிக்கு அவர் என்ன சட்டமன்ற உறுப்பினரா உள்ளாட்சி பிரதிநிதியா என சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் கேள்வி எழுப்பி வரும் சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது, திராவிட மாடல் நல்லாட்சியில் கொண்டுவரப்பட்ட பல்வேறு எண்ணற்ற மக்கள் நல திட்டங்களுக்கு வெற்றி (வெத்து) ஸ்டிக்கர் ஒட்டி பெயர் எடுத்து வரும் சோபா மாடல் அரசு இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது. ரீல்ஸ் முதல்வர் ஜோசப் விஜய் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்றும் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் மிகுந்த எதிர்பார்ப்பில் உள்ளனர்.

ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

தலைமைக் கழக அறிவிப்பு!

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், கருநாக்கமுத்தன்பட்டியை சேர்ந்த மு. வீரராகவன் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்: 22.10.2026

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

டி.ஆர். கோவிந்தன்
அக்டோபர் 23 (2021)



தனது இளமைக் காலத்திலிருந்தே தீவிரமாக கழகப் பணியில் ஈடுபட்டு வந்தவர்.

சென்னை, அண்ணா நகர் பகுதியில் மாவட்ட பிரதிநிதி, வட்டச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

2006ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கங்காதீஸ்வரர் கோவில் அறங்காவலர், புரசைவாக்கம் கூட்டுறவு வங்கி இயக்குநர் ஆகிய பொறுப்பு வகித்தவர்.

சட்டநகல் எரிப்புப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களை முன்னெடுத்தி நடத்தியதோடு, அதில் கலந்து கொண்டு எட்டு முறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.